# கோயம்பேடு மெட்ரோ நிலையத்தில் பயணிகளைக் கவரும் பசுமைத் தொட்டிகள்

**சென்னை, மார்ச் 5:** மெட்ரோ ரயில் நிலையங்களை பசுமையாக மாற்றும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, சென்னை கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையத்தில் பல்வேறு செடிகள் அடங்கிய பசுமைத்தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த பசுமைத்தொட்டிகள் மெட்ரோ ரயில் பயணிகளை கவர்ந்து வருகின்றன.

சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில் சுற்றுச்சூழலுக்கு உகந்த வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க மெட்ரோ ரயில் நிறுவனம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. மெட்ரோ ரயில் நிலையங்களின் நடைமேடை நிழற்பகுதியில் அதிக அளவு பிராணவாயுவை வெளியிடவும், மெட்ரோ ரயில் நிலையங்களில் அழகான தோற்றத்துக்கு உயிர் ஊட்டவும் சியோபைட்ஸ் வகைத் தாவரங்களைக் கொண்ட பசுமைத் தொட்டிகளை அமைக்க முடிவு செய்யப்பட்டது.



சென்னை கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள பசுமைத் தொட்டிகளில் தாவரம் வளர்க்கும் முயற்சியை பார்வையிட்டு ஆய்வு செய்த சென்னை மெட்ரோ ரயில் நிறுவன மேலாண் இயக்குநர் பிரதீப் யாதவ். உடன் நிறுவன உயரதிகாரிகள்.

அதன் முன்னோட்டமாக, கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையத்தில் சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருளால் தயாரிக்கப்பட்ட பசுமைத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவைகள் பயணிகளை கவர்ந்து வருகின்றன.

மணலால் நிரப்பப்பட்ட தட்டுகளில் இந்த பசுமைத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. ரெபிக்ஸ் எக்சல்சா பென்டானஸ், ஷெப்பிளரா வேரிகேட்டட் (குட்டை குடைத் தாவரம்) போன்ற அழகான உள்தாவரங்கள், செடிகள் ஆகியவை பசுமைத்தொட்டிகளில் நடப்பட்டுள்ளன. இதனால், கரியமில வாயு உறிஞ்சிப்பட்டு மெட்ரோ நிலையங்களில் உள்ள வெளிக்காற்று சுத்திகரிக்கப்படுகிறது. இது தொடர்ந்து, மாசுவைக் குறைப்பதற்கு உதவி செய்வதுடன் சுற்றுச்சூழல் பாதிப்பையும் குறைக்கும் என்று சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையில், கோயம்பேடு மெட்ரோ ரயில்நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள பசுமை தொட்டிகளை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பிரதீப் யாதவ் பார்வையிட்டார். அப்போது, மெட்ரோ ரயில் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.